RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025

# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

www.malaithanthi.in

DAILY EVENING

மாலை நாளிதழ்

சிவகங்கை | மலர்-5 | இதழ்- 110 | ஏப்ரல்.27 2026 திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5







# “நாட்டின் வரலாற்று சிறப்புமிக்க மைல்கல்”: கல்பாக்கம் அணு உலை குறித்து பிரதமர் மோடி பாராட்டு

**புது டெல்லி: ஏப்.27–**

கல்பாக்கத்தில் அமைந்துள்ள விரைவு ஈனுலை, நிலைமாறு நிலையை அடைந்தது இந்தியாவின் பெருமையை உயர்த்தியுள்ளது என மனதின் குரல் நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மனதின் குரல் நிகழ்ச்சியில் நாட்டு மக்களிடம் இன்று பிரதமர் மோடி ஆற்றிய உரையின் விவரம்: தமிழ்நாட்டின் கல்பாக்கத்தில் அமைந்துள்ள 'விரைவு ஈனுலை' (Fast Breeder Reactor) 'நிலைமாறு நிலையை' (Criticality) அடைந்துள்ளது. 'நிலைமாறு நிலை' என்பது ஒரு அணு உலை முதன்முறையாகத் தனக்குத்தானே இயங்கக்கூடிய அணுக்கருத் தொடர்வினையை வெற்றிகரமாக அடையும் கட்டமாகும். இந்தக் கட்டம், அந்த அணு உலை முழுமையாகச் செயல்பாட்டு நிலைக்குள் நுழைவதைக் குறிக்கிறது.

இந்தியாவின் அணுசக்திப் பயணத்தில் இது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க மைல்கல் ஆகும். இந்த அணு உலை முழுமையாக உள்நாட்டு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உள்நாட்டிலேயே கட்டமைக்கப்பட்டுள்ளது. ஆற்றலை உற்பத்தி செய்வதோடு மட்டுமல்லாமல், இந்த ஈனுலை எதிர்காலத்திற்கான புதிய எரிபொருளையும் உற்பத்தி செய்கிறது. இந்தியாவின் அணுசக்தித் திட்டத்திற்கு விலைமதிப்பற்ற பங்களிப்புகளை வழங்கிய விஞ்ஞானிகள் அனைவருக்கும் வாழ்த்துகள். இத்திட்டம் தொழில்துறை வளர்ச்சிக்கும், எரிசக்தித் துறைக்கும், சுகாதாரத் துறைக்கும் பயனளிக்கும்.

இந்தியா காற்றாற்றல் மின்சார உற்பத்தியிலும் முன்னணியில் உள்ளது. காற்றாற்றல் துறையில் இந்தியா சமீபத்தில் ஒரு முக்கிய மைல்கல்லை எட்டியுள்ளது. இந்தியாவின் காற்றாற்றல் உற்பத்தித் திறன் தற்போது 56 ஜிகாவாட்களைத் தாண்டியிருக்கிறது. கடந்த ஓராண்டில் மட்டும், ஏறக்குறைய 6 ஜிகாவாட் அளவிற்கான புதிய உற்பத்தித் திறன் சேர்க்கப்பட்டுள்ளது. காற்றாற்றல் துறையில் இந்தியா மிக வேகமாக முன்னேறி வருகிறது. காற்றாற்றல் உற்பத்தித் திறனில் உலக அளவில் இந்தியா நான்காவது இடத்தில் உள்ளது. குஜராத், தமிழ்நாடு, மகாராஷ்டிரா மற்றும் ராஜஸ்தான் உள்ளிட்ட நாட்டின் பல மாநிலங்கள் இத்துறையில் முன்னோடிகளாகத் திகழ்கின்றன. குஜராத் மாநிலத்தின் கட்ச், பாடன் மற்றும் பனஸ்கந்தா போன்ற பகுதிகளில் பிரம்மாண்டமான புதுப்பிக்கத்தக்க காற்றாற்றல் பூங்காக்கள் உருவாகி வருகின்றன. இந்தியாவின் வளர்ச்சிக்குச் சூரிய ஆற்றலும், காற்றாற்றலும் இன்றியமையாதவை.



உலகின் மிகப்பெரிய மக்கள்தொகைக் கணக்கெடுப்பு இந்தியாவில் நடக்கிறது. 2027 மக்கள்தொகைக் கணக்கெடுப்பு டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளது. அனைத்துத் தகவல்களும் நேரடியாக டிஜிட்டல் வடிவில் பதிவு செய்யப்படுகின்றன. வீடு வீடாகச் செல்லும் கணக்கெடுப்பாளர்கள், அனைத்துத் தகவல்களையும் உள்ளிடுவதற்கு ஒரு மொபைல் செயலியைப் பயன்படுத்துகின்றனர். இதனால் இந்த முறை மக்கள்தொகைக் கணக்கெடுப்பு எளிதாக்கப்பட்டுள்ளது. இதுவரை சுமார் ஒரு கோடியே இருபது லட்சம் குடும்பங்களுக்கான கணக்கெடுப்பு முடிக்கப்பட்டுள்ளன. தேசிய மக்கள் தொகைக் கணக்கெடுப்பு என்பது அரசாங்கத்தின் பணி மட்டுமல்ல, அது அனைவரின் பொறுப்பு. இதில் மக்களின் பங்கேற்பு மிகவும் முக்கியமானது. மக்களால் வழங்கப்படும் தகவல்கள் முற்றிலும் பாதுகாப்பானவை, ரகசியமானவை.

'ரன் ஆஃப் கட்ச்' (Rann of Kutch) பகுதியில் ஒவ்வொரு ஆண்டும் பருவமழை முடிவடைந்த உடனேயே லட்சக்கணக்கான 'ஃபிளமிங்கோ' பறவைகள் வந்து குவிகின்றன. அந்தப் பகுதி முழுவதும் இளஞ்சிவப்பு நிறமாக மாறிவிடுவதால், அதற்கு 'ஃபிளமிங்கோ நகரம்' (Flamingo City) என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது. கட்ச் பகுதி மக்கள் அந்தப் பறவைகளை 'லக்கா ஜி கே பாராதி' என்று அழைக்கின்றனர். தற்போது, கட்ச் பகுதியில் சுற்றுச்சூழல் பாதுகாப்பின் அழகான அடையாளமாக இந்த 'லக்கா ஜி கே பாராதி' பறவைகள் மாறியிருப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது.

மூங்கில் துறையில் வடகிழக்கு மாநிலங்கள் வெற்றி அடைந்துள்ளன. ஒரு காலத்தில் சுமையாகக் கருதப்பட்ட மூங்கில்கள், இப்போது வேலைவாய்ப்பு, வணிகம் மற்றும் புத்தாக்கத்திற்குப் புதிய உத்வேகத்தை அளிக்கின்றன. பிரிட்டிஷ் சட்டத்தின்படி, மூங்கில் ஒரு மரமாக வரையறுக்கப்பட்டது, அதனுடன் தொடர்புடைய விதிகள் மிகவும் கடுமையாக இருந்தன. மூங்கிலை எங்கும் கொண்டு செல்வது மிகவும் கடினமாக இருந்தது. அதன் விளைவாக மக்கள் மூங்கில் தொடர்பான தொழில்களில் இருந்து விலகத் தொடங்கினர். எனது அரசாங்கம் 2017ல் சட்டத்தை மாற்றி, மூங்கிலை மர வகையிலிருந்து நீக்கியது.

இன்று வடகிழக்கு முழுவதும் மூங்கில் தொழில் துறை செழித்து வளர்ந்து வருகிறது. திரிபுராவின் கோமதி மாவட்டத்தைச் சேர்ந்த பிஜோய் சூத்ரதர் மற்றும் தெற்கு திரிபுராவைச் சேர்ந்த பிரதீப் சக்ரவர்த்தி ஆகியோர் புதிய மூங்கில் சட்டங்களை தங்களுக்கு ஒரு பெரிய வாய்ப்பாகக் கருதி, தங்கள் பணியை தொழில்நுட்பத்துடன் ஒருங்கிணைத்துள்ளனர். இன்று, அவர்கள் முன்பை விட சிறந்த மற்றும் அதிக மூங்கில் பொருட்களை உற்பத்தி செய்கிறார்கள்.

நாகாலாந்தின் திமாபூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் மூங்கில் சார்ந்த உணவுப் பொருட்களுக்கு மதிப்புக்கூட்டல் செய்துள்ள பல சுய உதவிக் குழுக்கள் இருக்கின்றன. மூங்கில் மரச்சாமான்கள் மற்றும் கைவினைப் பொருட்களில் பணியாற்றி வரும் 'கோரோலோ கிரியேட்டிவ் கிராஃப்ட்ஸ்' போன்ற குழுக்களும் உள்ளன. சிக்கிமில் உள்ள காங்டாக் அருகே, மூங்கிலிலிருந்து கைவினைப் பொருட்கள், ஊதுபத்திகள், மரச்சாமான்கள் மற்றும் உள் அலங்காரப் பொருட்களைத் தயாரிக்கும் 'லகாஸ்டல் மூங்கில் எண்டர்பிரைஸ் டீம்' சிறப்பாக செயல்படுகிறது.

இந்திய தேசிய ஆவணக் காப்பகம் 20 கோடிக்கும் மேற்பட்ட விலைமதிப்பற்ற ஆவணங்களை டிஜிட்டல் மயமாக்கிப் பொதுமக்களுக்குக் கிடைக்கச் செய்துள்ளது. இந்த ஆவணங்களில், போஜ பாத்ரா குறித்து எழுதப்பட்ட 7ஆம் நூற்றாண்டு கில்கிட் கையெழுத்துப் பிரதிகளும், 8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சுவாரஸ்யமான நூலான சிறிபூவாலயமும் அடங்கும்.

இந்த ஆவணங்களில், ராணி லட்சுமிபாய் தொடர்பான சில முக்கியக் கடிதங்களும் அடங்கும்; அவை 1857ல் அவர் எடுத்த சில முடிவுகளை வெளிப்படுத்துகின்றன. நேதாஜியின் வாழ்க்கை, ஆசாத் ஹிந்த் ஃபௌஜ் மற்றும் அவரது உரைகள் தொடர்பான பல ஆவணங்கள் உள்ளன.

குழந்தைகள் தங்கள் கோடை விடுமுறையை முழுமையாகக் கொண்டாட வேண்டும். புதிதாக ஏதேனும் ஒன்றைக் கற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டும். கோடைக்காலத்தில் அனைவரும் தங்கள் உடல்நலத்தில் அக்கறை செலுத்த வேண்டும். இவ்வாறு பிரதமர் மோடி தெரிவித்தார்.








# மானாமதுரையில் 15வது நாளாக மோர் வழங்கும் பசுமை செயல் குழு

**மானாமதுரை: ஏப்.27-**

கோடை வெயில் அதிகரித்து வரும் நிலையில், மானாமதுரையில் பொதுமக்களின் தாகம் தணிக்க பசுமை செயல் குழு சார்பில் தொடர்ந்து 15வது நாளாக மோர் சக்கரை பொங்கல் , சுண்டல் வழங்கும் சேவை நடைபெற்றது.

அருள்மிகு ஆனந்தவல்லி அம்மன் கோயில் அருகே நடைபெற்ற இந்த முகாமில், ஆட்டோ ஓட்டுநர்கள், பாதசாரிகள் மற்றும் வாகன ஓட்டிகள் மோர் பருகி பயனடைந்தனர்.

பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு தொடர்ந்து நடைபெறும் இந்த மனிதநேய சேவைக்கு மானாமதுரை மக்களிடையே நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. பசுமை செயல் குழுவினரின் இந்த சேவை பாராட்டுக்குரியது என பொதுமக்கள் தெரிவித்தனர்.

# பாஜ ஆட்சி அமைந்தவுடன் மகளிருக்கு மாதம் ரூ.3000 : மேற்கு வங்கத்தில் அமித் ஷா உறுதி

**நாடியா: ஏப்.27–**

மே மாதத்திற்கு பின், மேற்கு வங்க மாநில பெண்கள் ஒவ்வொருவரின் வங்கி கணக்கிலும் ரூ. 3000 டெபாசிட் செய்யப்படும் என்று உள்துறை அமைச்சர் அமித் ஷா உறுதி அளித்துள்ளார்.

மேற்கு வங்கத்தில் சட்டசபை தேர்தலுக்கான முதல்கட்ட ஓட்டுப்பதிவு ஏப்.23ம் தேதி முடிந்து விட்டது. 2ம் மற்றும் இறுதிக்கட்ட தேர்தல் ஏப். 29ம் தேதி நடக்கிறது. இதற்காக தீவிர ஓட்டு வேட்டையில் பாஜ, திரிணமுல் காங்கிரஸ் உள்ளிட்ட பல முக்கிய கட்சிகள் இறங்கி உள்ளன. பிரதமர் மோடியும் மேற்கு வங்கத்தில் தீவிர பிரசாரம் மேற்கொண்டு வருகிறார்.



நாடியாவில் உள்ள ரானாகாட் பகுதியில் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்த தேர்தல் பிரசார பொதுக்கூட்டம் ஒன்றில் உள்துறை அமைச்சர் அமித் ஷா பாஜ வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டினார். அப்போது அவர் பேசியதாவது;

மேற்கு வங்கத்தில் மே 4ம் தேதி பாஜ தனது அரசை அமைக்கும். அதன் பின்னர், இங்குள்ள ஒவ்வொரு சகோதரியின் வங்கிக்கணக்கிலும், தாய்மார்களின் வங்கிக்கணக்கிலும் பாஜ அரசு மாதம் தோறும் ரூ.3000 வரவு வைக்கும்.

வேலையில்லா இளைஞர்கள் அனைவரின் வங்கிக்கணக்கிலும் மாதம்தோறும் ரூ.3000 அனுப்பி வைக்கப்படும். அனைத்து தாய்மார்களும், சகோதரிகளும் பஸ் பயணத்திற்கு எந்தவொரு கட்டணமும் செலுத்த தேவையில்லை. அவர்கள் இலவசமாக பயணிக்கலாம்.

மம்தா பானர்ஜியும், காங்கிரசும் ஆட்சியில் இருந்த காலத்தில் அவர்கள், பயங்கரவாதத்தை வளர்த்து வந்தனர். 2014ல் பிரதமர் மோடி அரசு ஆட்சிக்கு வந்த பின்னர், உரியில் தாக்குதல் நடந்தது. அப்போது நாம் துல்லிய தாக்குதல் நடத்தினோம். புல்வாமாவில் தாக்குதல் நடந்தது. அப்போது நாம் வான்வழியாக தாக்குதல் நடத்தினோம்.

பாகிஸ்தானில் நுழைந்து, ஆப்பரேஷன் சிந்தூரை நடத்தி பயங்கரவாதிகளை ஒழித்தோம். பிரதமர் மோடி நாட்டை பயங்கரவாதிகளின் பிடியில் இருந்து விடுவித்துள்ளார். இங்கு அமைய இருக்கும் மோடி அரசு, ஊடுருவல்காரர்கள் அனைவரையும் கண்டறிந்து, சட்டப்பூர்வமாக அவர்களை வெளியேற்றும்.

இவ்வாறு அமித் ஷா பேசினார்.

# நீட் தேர்வுக்கான ஹால்டிக்கெட் இன்று வெளியாகிறது

**சென்னை, ஏப்.27-**

நாடு முழுவதும் எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ்., சித்தா உள்ளிட்ட மருத்துவ படிப்பில் சேர்வதற்கான 'நீட்' நுழைவுத்தேர்வு அடுத்த மாதம் (மே) 3ந் தேதி நடைபெற உள்ளது. இந்த தேர்வை எழுத தமிழகத்தில் 2 லட்சம் மாணவமாணவிகள் உள்பட நாடு முழுவதும் 28 லட்சம் பேர் விண்ணப்பித்துள்ளனர். தேர்வுக்கான ஏற்பாடுகளை தேசிய தேர்வு முகமை செய்து வருகிறது.




இந்த சூழலில் 'நீட்' தேர்வுக்கான ஹால்டிக்கெட் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் இளநிலை நீட் தேர்வுக்கான ஹால் டிக்கெட் இன்று (ஏப்., 27ம் தேதி) வெளியிடப்படும் என்று தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது.

இதன்படி தேசிய தேர்வு முகமையின் அதிகாரப்பூர்வ இணையதளமான neet.nta.nic.in ல் நாளை வெளியிடப்படும். இத்தேர்வு எழுத விண்ணப்பித்தவர்கள் இணையதளத்தில் இருந்து தங்களின் விண்ணப்ப எண் மற்றும் பிறந்த தேதியை பயன்படுத்தி ஹால் டிக்கெட்டை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இந்த ஹால்டிக்கெட்டில் மாணவர்களின் பெயர், பதிவு எண், தேர்வு மையம், தேர்வு மையத்தில் மாணவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் உள்ளிட்டவை இடம்பெற்றிருக்கும். ஹால்டிக்கெட்டை பதிவிறக்கம் செய்து அதில் கூறப்பட்டிருக்கும் விதிமுறைகளை மாணவர்கள் அறிந்து கொள்ளலாம்.

மேலும் தேர்வு எழுத செல்லும் போது தேர்வறைக்கு செல்ல இந்த ஹால்டிக்கெட்டை கட்டாயம் எடுத்து செல்ல வேண்டும். தேர்வு மைய நுழைவுவாயிலில் தேர்வர்களை பலத்த சோதனை செய்த பின்னரே அனுமதிக்கப்படுவார்கள். அதனால் முன்கூட்டியே விதிமுறைகளை கடைப்பிடித்து சென்றால் தேர்வு நாளில் பதற்றமில்லாமல் தேர்வை எழுத எளிதாக இருக்கும் என தேசிய தேர்வு முகமை தெரிவித்துள்ளது.

# தேனி மாவட்டம் வீரபாண்டி ஸ்ரீ கௌமாரியம்மன் திருக்கோயில் நாளுக்கு நாள் பக்தர்கள் தரிசனம்




தேனி, ஏப். 27-
தேனி மாவட்டம் வீரபாண்டி ஸ்ரீ கௌமாரியம்மன் திருக்கோயில் நாளுக்கு நாள் பக்தர்கள் தரிசனம் செய்வதற்காகவும், நேர்த்திக்கடன்களை செலுத்துவதற்காகவும் தினசரி ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து செல்கின்றனர். அம்மன் அருளைப் பெறும் இந்த புனித தலத்திற்கு அமைதியையும் ஆன்மிக நிம்மதியையும் தேடி வரும் பக்தர்கள், கோயில் வளாகத்தில் சில இடையூறுகள் இருப்பதாக கவலை தெரிவித்து வருகின்றனர். கோயில் வளாகத்தின் வலது புறத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒரு பிரசாத ஸ்டாலில் அதிக சத்தத்துடன் ஒலிபெருக்கி பயன்படுத்தப்பட்டு தொடர்ந்து "பிரசாதம், பிரசாதம்" என்று அழைப்பு விடுக்கப்படுவது, அமைதியாக தரிசனம் செய்ய விரும்பும் பக்தர்களுக்கு மிகுந்த தொந்தரவாக உள்ளது.

கோயிலுக்கு வரும் பக்தர்கள் மன அமைதியுடன் அம்மனை தரிசிக்க வேண்டும் என்பதே அனைவரின் விருப்பம். ஆனால் இத்தகைய அதிக ஒலி, பக்தி சூழலை பாதிப்பதுடன், முதியவர்கள், பெண்கள், குழந்தைகள் மற்றும் நோன்பு நேர்த்திக்கடன் செலுத்த வருபவர்களுக்கும் சிரமத்தை ஏற்படுத்துகிறது.

மேலும், கோயில் வளாகத்தில் ஏற்கனவே ஒரு பிரசாத ஸ்டால் இருக்கும் நிலையில், இரண்டு பிரசாத ஸ்டால்கள் இயங்குவது பக்தர்கள் சுலபமாக நகர்வதற்கும் இடையூறாக இருப்பதாக பலர் கருத்து தெரிவிக்கின்றனர். எனவே, மதிப்பிற்குரிய இந்து சமய அறநிலையத்துறை, வீரபாண்டி ஸ்ரீ கௌமாரியம்மன் திருக்கோயில் செயல் அலுவலர் மேடம் அவர்கள், பக்தர்களின் இந்த நியாயமான கோரிக்கையை கவனத்தில் கொண்டு, கோயில் வளாகத்தில் அமைதியும் ஒழுங்கும் நிலைக்க உரிய நடவடிக்கை எடுத்து, ஒலிபெருக்கி சத்தத்தை கட்டுப்படுத்தி, பிரசாத ஸ்டால்களின் அமைப்பை சீராக்கி பார்க்க வேண்டுமென பக்தர்கள் அன்புடன் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# இந்தியா நியூசிலாந்து இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்து



புது டெல்லி, ஏப்.27-
இந்தியா மற்றும் நியூசிலாந்து நாடுகளுக்கு இடையிலான வர்த்தக ஒப்பந்தம் நாளை (ஏப்ரல் 27) கையெழுத்தாகும் என்று மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்தார். நியூசிலாந்தின் வர்த்தகம் மற்றும் முதலீட்டு துறை அமைச்சர் டோட் மெக்ளேயுடன் ஆக்ரா சென்றிருந்தபோது பேசிய கோயல், "இந்தியா மற்றும் நியூசிலாந்து இடையேயான இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் குறித்து பிரதமர் நரேந்திர மோடி மற்றும் நியூசிலாந்து பிரதமர் கிறிஸ்டோபர் லக்சன் ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தினர். பல ஆண்டு கால பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு, இந்த ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு, நாளை கையெழுத்தாக உள்ளது. இந்த ஒப்பந்தம் காரணமாக இந்தியாவிலிருந்து நியூசிலாந்துக்குச் செல்லும் பொருட்களில் சுமார் 70 சதவீதம் எந்த இறக்குமதி வரியும் இன்றி அங்கு சென்றடையும். இந்த ஒப்பந்தம், பல துறைகளுக்கு, குறிப்பாக பாரம்பரிய மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு புதிய ஏற்றுமதி வாய்ப்புகளை உருவாக்கும். நமது ஆக்ரா தோல் வணிகம், உத்தரப் பிரதேச கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்கள் மற்றும் நமது 'ஒரு மாவட்டம் ஒரு தயாரிப்பு' திட்டத்தில் பொருட்களைத் தயாரிக்கும் தச்சர்கள், கைவினைக் கலைஞர்கள் மற்றும் இன்னும் பல துறைகளுக்குப் புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

சில மாதங்களில், இது இந்தியாவுக்கும் நியூசிலாந்துக்கும் இடையிலான வர்த்தகத்தை அதிகரிப்பதற்கான ஒரு வழியாக அமையும். இந்த தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் ஏற்றுமதி வாய்ப்புகளை விரிவுபடுத்துவதுடன் இந்தியாவுக்கும் நியூசிலாந்துக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும்" என்றார்.

# வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள லயோலா கல்லூரிக்குள் ஆம்புலன்ஸ் வந்ததால் போலீஸாருடன் தவெகவினர் வாக்குவாதம்



சென்னை, ஏப்.27-
லயோலா கல்லூரியில் வாக்குப் பதிவு இயந்திரங்கள் பாதுகாக்கும் மையத்துக்குள் ஆம்புலன்ஸ் வாகனம் சென்றதையடுத்து, சந்தேகமடைந்த தவெக நிர்வாகிகள் அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த போலீஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. சென்னையில் உள்ள 16 சட்டப்பேரவை தொகுதிகளில் பொதுமக்கள் வாக்களித்த மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள், பலத்த போலீஸ் பாதுகாப்புடன் சென்னை லயோலா கல்லூரி, அண்ணா பல்கலைக் கழகம் மற்றும் ராணிமேரி கல்லூரி ஆகிய மூன்று இடங்களில் வைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, லயோலா கல்லூரி மையத்தில் அண்ணாநகர், வில்லிவாக்கம், கொளத்தூர், பெரம்பூர், ஆயிரம் விளக்கு மற்றும் எழும்பூர் ஆகிய 6 தொகுதிகளின் வாக்குப் பதிவு இயந்திரங்கள் 'ஸ்ட்ராங் ரூமில்' வைக்கப்பட்டு, அரசியல் கட்சி முகவர்கள் முன்னிலையில் சீல வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மையத்திலும் 4 அடுக்குப் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. இதில் சுழற்சி முறையில், 30 மத்திய துணை ராணுவப் படை வீரர்கள், உதவி ஆணையர் தலைமையில் 15 தமிழ்நாடு சிறப்புப் படை வீரர் கள், 40 ஆயுதப்படை வீரர்கள், 50 சட்டம் ஒழுங்கு மற்றும் போக்குவரத்து போலீஸார் என மொத்தம் 500க்கும் மேற்பட்ட வீரர்கள் இரவு, பகலாகப் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். அங்கு பணியாற்றும் காவலர்கள் மற்றும் ஊழியர்களுக்காகச் சிறப்பு மருத்துவ முகாம்களும் அமைக்கப்பட்டுள்ளன. திமுக, அதிமுக உள்ளிட்ட அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் முகவர்கள் உரிய அனுமதி பெற்று, அங்குள்ள கட்டுப்பாட்டு அறை கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், நேற்று முன் தினம் இரவு மருந்துவத் தேவைக்காக ஆம்புலன்ஸ் ஒன்று லயோலா கல்லூரி வளாகத்துக்குள் சென்றதாகக் கூறப்படுகிறது. இதைக் கண்ட தவெக நிர்வாகிகள், ஆம்புலன்ஸ் உள்ளே செல்வதில் சந்தேகம் இருப்பதாகக் கூறி பாதுகாப்புப் பணியில் இருந்த போலீஸாருடன் வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர். தவெகவினர் பிடிவாதம்: மேலும், அவர்களிடம் முறையான அனுமதி கடிதம் இல்லாத நிலையிலும், அடையாள அட்டையை மட்டுமே காட்டி உள்ளே செல்ல அனுமதிக்கு மாறு அவர்கள் பிடிவாதம் பிடித்தனர். இதனைத் தொடர்ந்து, அனுமதி கடிதம் இன்றி உள்ளே நுழைய முடியாது என்பதை திட்டவட்டமாகத் தெரிவித்த போலீஸார், விதிகளை மீற வேண்டாம் என தவெக நிர்வாகிகளுக்கு கண்டிப்புடன் அறிவுரை வழங்கி அவர்களை அங்கிருந்து அனுப்பி வைத்தனர். இதனால் அந்த பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு நிலவியது.

# குட்டி ஓவியர்களின் பெரிய முயற்சி சொந்த உழைப்பில் வருமானம் ஈட்டிய பழனி பள்ளி மாணவர்கள்



பழனி, ஏப்.27-
பழனி அறம் பவுண்டேஷன் மற்றும் பழனி சூப்பர் ஆர் அகாடமி இணைந்து, பள்ளி மாணவ மாணவிகளின் தனித்திறமையை வெளிக்கொணரும் வகையில் ஒரு சிறப்பான ஓவியக் கண்காட்சி மற்றும் விற்பனை நிகழ்வை நிகழ்த்தின. வெறும் கண்காட்சியாக மட்டுமில்லாமல், மாணவர்கள் தாங்கள் வரைந்த ஓவியங்களை விற்பனை செய்வதன் மூலம், அவர்களுக்கு வியாபார நுணுக்கங்கள் குறித்தும், தங்களின் சொந்த உழைப்பின் மீதும் நம்பிக்கை ஏற்பட வேண்டும் என்பதே இந்த நிகழ்வின் முக்கிய நோக்கமாக அமைந்தது. நிகழ்ச்சியில் சூப்பர் ஆர் அகாடமியின் நிறுவனர்சின்னப்பா பேசுகையில்: "எதிர்காலங்களில் ஏற்படும் மன அழுத்தங்களைக் குறைக்கவும், நோய் நொடிகள் இல்லாத ஆரோக்கியமான வாழ்வை வாழவும் ஓவியக்கலை ஒரு மிகப்பெரிய உறுதுணையாக இருக்கிறது என்பதை உணர்த்துவதே இக்கண்காட்சியின் நோக்கம்."இக்கண்காட்சியில் 3 வயது குழந்தைகள் முதல் 13வயது வரை உள்ள பலரும் ஆர்வத்துடன் கலந்து கொண்டு தங்களது படைப்புகளைக் காட்சிப்படுத்தினர். மாணவர்கள் மத்தியில் இந்த முயற்சி பெரும் வரவேற்பைப் பெற்றதோடு, தங்களது குழந்தைகளின் திறமையைக் கண்ட பெற்றோர்களுக்கும் பெரும் தன்னம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. திறமைகளை வெறும் பொழுதுபோக்காகப் பார்க்காமல், அதை ஒரு வாழ்வாதாரமாகவும், மன அமைதிக்கான வழியாகவும் மாற்றிய இந்த முயற்சி பழனி பகுதியில் பலரது பாராட்டுகளைப் பெற்று வருகிறது.

# மேற்கு வங்க மாநிலத்தில் பிரச்சாரம் தீவிரம்: ஏப்ரல் 29ல் இரண்டாம் கட்டத் தேர்தல்



கொல்கத்தா, ஏப்.27-
மேற்கு வங்கத்தில் வரும் 29ம் தேதி நடைபெறவுள்ள இரண்டாம் கட்ட தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

மேற்கு வங்கத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் 2 கட்டமாக நடைபெறுகிறது. முதல்கட்டமாக கடந்த 23ம் தேதி 152 தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெற்றது. மீதமுள்ள 142 தொகுதிகளுக்கு ஏப்ரல் 29ம் தேதி தேர்தல் நடைபெற உள்ளது. இந்நிலையில் அங்கு தேர்தல் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

பாஜக தேசியத் தலைவர் நிதின் நபின் நேற்று பாரா நகரில் பிரம்மாண்ட ரோடு ஷோ நடத்தினார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், "மேற்கு வங்கம் தனது பழைய பெருமையை மீட்டெடுக்கவும், அச்ச அரசியலைத் தீர்க்கமாக நிராகரிக்கவும் தயாராக உள்ளது" என்று குறிப்பிட்டுள்ளார். அதேபோல், மேற்கு வங்க எதிர்க்கட்சித் தலைவர் சுவேந்து அதிகாரி, முதல்வர் மம்தா பானர்ஜி மற்றும் திரிணமூல் காங்கிரஸ் தலைவர்கள் மீது ஊழல் மற்றும் திருப்திப்படுத்தும் அரசியல் புகார்களைக் கூறி கடும் தாக்குதலைத் தொடுத்துள்ளார். திரிணமூல் காங்கிரஸ் தலைவர் குணால் கோஷ், முதற்கட்ட வாக்குப் பதிவில் தங்கள் கட்சி வலுவாகச் செயல்பட்டுள்ளதாகக் கூறினார். மேலும், திரிணமூல் காங்கிரஸ் மீண்டும் ஆட்சியைத் தக்கவைக்கும் என்றும் அவர் உறுதிப்படத் தெரிவித்தார்.

காங்கிரஸ் மாநிலங்களவை எம்.பி.க்களான பிரமோத் திவாரி மற்றும் அகிலேஷ் பிரசாத் ஆகியோர் நேற்று கூறும்போது, "சட்டப் பேரவைத் தேர்தலுக்குப் பிறகு மேற்கு வங்கத்தில் ஆட்சி அமைப்பதில் காங்கிரஸ் தீர்க்கமான பங்கை வகிக்கும்" என்று உரிமை கோரினர். மேற்கு வங்கத்தில் 20 ஆண்டுகளுக்குப் பிறகு காங்கிரஸ் எந்தக் கூட்டணியும் இன்றி தனித்துப் போட்டியிடுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.




# சென்னை: போலீஸ் உடையில் வந்து பழக்கடை ஊழியரிடம் ரூ.14 லட்சம் பறிப்பு

வேலூர், ஏப்.27-
வேலூர் மாவட்டம், பேர் ணாம்பட்டு பகுதியைச் சேர்ந்த தவர் தர்ஷீர் (26). இவர் சென்னை, கோயம்பேடு மார்க் கெட்டில் உள்ள ஒரு பழக்கடையில் ஊழியராகப் பணியாற்றி வருகிறார். நேற்று முன் தினம் இரவு தர்ஷீர் கடையில் இருந்தபோது, அதன் உரிமையாளர் ஷேக் ரோஷன் என்பவர் அவரைத் தொடர்பு கொண்டு, தான் தற்போது வானகரத்தில் இருப்பதாகவும், கடையில் உள்ள ரூ.14 லட்சம் ரொக்கப் பணத்தை எடுத்துக்கொண்டு உடனடியாக அங்கு வருமாறும் கூறியுள்ளார்.

முதலாளியின் உத்தரவின் படி, தர்ஷீர் பணப் பையுடன் ஆட்டோவில் வானகரம் சென்றார். ஆட்டோ நெற்குன்றம் தயாரசதன் சாலை வழியாகச் சென்று கொண்டிருந்த போது, அங்கு போலீஸ் சீருடையில் இருந்த 2 பேர் ஆட்டோவை வழிமறித்தனர்.

போக்குவரத்து காவலர்கள் போலத் தோற்றமளித்த அவர்கள், ஆட்டோ ஓட்டுநரிடம் ஆவணங்களைச் சரிபார்ப்பது போல நடித்துள்ளனர். பின்னர், ஆட்டோவில் இருந்த தர்ஷீரிடம், "பையில் என்ன இருக்கிறது ?" என்று கேட்டுள்ளனர். தர்ஷீர் தன்னிடம் பணம் இருப்பதாகக் கூறியவுடன், ஒரு காவலர் அவரிடமிருந்த ரூ.14 லட்சம் பணப்பை மற்றும் செல்போனைப் பறித்துக் கொண்டு, அங்கிருந்த ரோந்து வாகனம் போன்ற வாகனம் ஒன்றில் ஏறி மின்னல் வேகத்தில் புறப்பட்டுச் சென்றார்.

மற்றொரு நபர், தர்ஷீரை தனது பைக்கில் ஏற்றிச் சென்று மதுரவாயல் பாலத்தின் கீழே இறக்கிவிட்டு விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றார். காவலர்களின் நடவடிக்கையில் சந்தேகமடைந்த தர்ஷீர், உடனடியாக அருகில் உள்ள காவல் நிலையத்துக்குச் சென்று விசாரித்தார். அப்போது, அப்பகுதியில் சோதனையில் ஈடுபட்ட காவலர்கள் யாரும் பணம் பறிமுதல் செய்யவில்லை என்பது தெரியவந்தது.


தான் ஏமாற்றப் பட்டதை உணர்ந்த தர்ஷீர், இது குறித்து அளித்த புகாரின் பேரில், கோயம்பேடு போலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். போலீஸார் அந்தப் பகுதியில் உள்ள சிசிடிவி காட்சிகளைக் கொண்டு, போலீஸ் உடையில் வந்து கைவரிசை காட்டிய அந்த மர்ம நபர்கள் குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# "குளு குளு ஊட்டி ஒரு கேடா என்றவர்கள் இவர்கள்" முதல்வர் பயணம் குறித்து தமிழிசை காட்டம்



சென்னை, ஏப்.27-
'பணியில் இருக்க வேண்டிய முதல்வர் வாரிசுகளை கூட்டிக்கொண்டு கொடைக்கானலில். வாக்களிக்க துணை நின்ற மக்கள் தங்கள் அன்றாட பணியில், ஆனால் துணை முதல்வர் அயல் நாட்டு பயணத்தில். ஆய்வு செய்ய வேண்டியவர்கள் ஓய்விற்கு செல்கிறார்கள்' என முதல்வர் ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதியின் ஓய்வு பயணம் குறித்து பாஜக மூத்த தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் விமர்சித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், 'ஓட்டளிக்க வரிசையில் நின்ற மக்கள் எல்லோரும் கோடையில் வீட்டில் தன் பணியில்.. ஆனால் பணியில் இருக்க வேண்டிய முதல்வர் வாரிசுகளை கூட்டிக்கொண்டு கொடைக்கானலில். வாக்களிக்க துணை நின்ற மக்கள் தங்கள் அன்றாட பணியில், ஆனால் துணை முதல்வர் அயல் நாட்டு பயணத்தில். அரசியல் என்பது அனைவருக்கும் சமமே. திமுகவின் இந்த ஏற்றத்தாழ்வு மனப்பான்மை, அவர்களின் ஏற்றத்திற்காக அல்ல இறக்கத்திற்காகவே. ஆய்வு செய்ய வேண்டியவர்கள் ஓய்விற்கு செல்கிறார்கள். ஆனால் இதே கூட்டம் தான் அன்று அரசு வேலையாக ஊட்டி சென்ற காமராஜரை கும்பி எரியுது குடல் வேகுது குளு குளு ஊட்டி ஒரு கேடா என்று கேலி பேசியவர்கள். புரிந்து கொள்ளுங்கள் இவர்களை. பொதுநலம் என்று பேசிக்கொண்டு தெரியும் இந்த சுயநலவாதிகளை' எனத் தெரிவித்துள்ளார்.

# "சிறுபான்மை ஜாதிகளை 'குழிதோண்டி புதைத்த' தேர்தல் இது" நாராயணன் திருப்பதி காட்டம்



சென்னை, ஏப்,27-
சிறுபான்மை ஜாதிகளை குழிதோண்டி புதைத்த ஜாதிய தேர்தலாக நடந்து முடிந்த தேர்தல் இருந்ததாக பாஜகவின் மாநில தலைமைச் செய்தித் தொடர்பாளர் நாராயணன் திருப்பதி விமர்சித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடக பதிவில், "நடந்த முடிந்த சட்டமன்ற தேர்தலில் ஜாதி, பணம், ஆள் பலம் தான் முக்கிய காரணிகளாக இருந்தன. பணபலம் இல்லாமல் ஆள் பலம் இல்லை; ஜாதி பலம் இல்லாமல் பணபலம் இல்லை. மொத்தத்தில் ஜாதியை ஒழித்து விட்டோம் என்று கூவுகின்ற தமிழகத்தில் ஜாதி இல்லையேல் அரசியலே இல்லை, ஜாதி இல்லையேல் அதிகாரமே இல்லை. ஜாதி வெறிபிடித்த, ஜாதி அரசியல் உள்ள, ஜாதி வன்மம் மிக்க, எங்கும் ஜாதி, எதிலும் ஜாதி என்று பரவியிருக்கின்ற மாநிலம் தமிழ் நாடு என்றால் அதில் சந்தேகமேயில்லை. ஜாதியே அரசியல், ஜாதியே பணம், ஜாதியே வாழ்க்கை, ஜாதியே அதிகாரம் என்பது தான் 'திராவிட மாடல்'.

தொழில் சார்ந்து வாழ்க்கை முறையென வடிவமைக்கப்பட்டிருந்த ஜாதிய கட்டமைப்பை தகர்த்தெறிந்து தங்களின் அதிகாரத்திற்காக, சொத்துக்குவிப்பிற்காக, குடும்பத்தின் முன்னேற்றத்திற்காக, சுயநலத்துக்காக, ஒடுக்காக, அந்த ஓட்டு தரும் பதவிக்காக, அந்த பதவி தரும் பணத்திற்காக 'ஜாதிய அரசியல்' என்று கட்டமைக்கப்பட்டது தான் 'திராவிட மாடல்'.ஒரு புறம் ஜாதி என்பது ஒவ்வொரு சமுதாயத்தின் வாழ்க்கை முறை என்பதையும், ஜாதி ரீதியாக கட்டமைக்கப்பட்டது தான் சமுதாயம் என்பதையும் மறைத்து அல்லது செய்யும் தொழிலின் மூலம் உருவானது தான் ஜாதி என்பதை ஏற்க மறுத்து, கலப்பு மணம் தான் ஜாதியை ஒழிக்கும் மந்திரக்கோல் என்ற மாயையை/ பொய்யை பரப்பி, சாலைகளில் உள்ள பெரியோர்களின் பெயரில் இருந்த ஜாதிப் பெயரை நீக்கி, அந்தப் பெரியோர்களின் ஜாதிகளின் பெருமையை குலைக்க சதி செய்து, ஜாதியை ஒழித்து விட்டதாக மார்தட்டிக் கொண்டு, மறுபுறம் கட்சியில் ஜாதிக்கொரு பதவி, ஆட்சியில் ஜாதி ரீதியான பொறுப்புகள், அரசியலில் வாக்குகளை பெறுவதற்கு ஜாதி ரீதியான கட்சிகளை உருவாக்கி, அரசு நிர்வாகத்தில் ஜாதிய ரீதியாக நியமனங்களை செய்து, மக்களிடையே ஜாதி சங்கங்களை தூண்டி விட்டு குளிர்காயும் ஜாதி அரசியலை தான் 'திராவிட மாடல்' 60 வருடங்களாக செய்து கொண்டிருக்கிறது.

சிறுபான்மை மதத்தை அல்ல, சிறுபான்மை ஜாதிகளை குழிதோண்டி புதைத்த ஜாதிய தேர்தல், 2026 சட்டமன்ற தேர்தல். ராமானுஜரின் சமத்துவ சீர்திருத்தத்தை, பாரதியார் வலியுறுத்திய 'ஜாதிகள் இல்லையடி பாப்பா' என்ற தொலைநோக்குப் பார்வையை, ராஜாஜி செயல்படுத்திய ஜாதி தீண்டாமை ஒழிப்பை, அம்பேத்கர் முன்னெடுத்த சமத்துவத்தை மறந்து, மறைத்து ஜாதிய அரசியலை புகுத்திய 'திராவிட மாடல்' அரசியல் தான் 2026 சட்டமன்ற தேர்தல். ஜாதி, பணம் இவை இரண்டும் தான் இனி தமிழக அரசியல் பாதை!" என தெரிவித்துள்ளார்.

# ரயில் பாதை மேம்பாட்டு பணி காரணமாக காவேரி விரைவு ரயில் உட்பட 23 ரயில்களின் சேவையில் மாற்றம்

பெங்களூரு, ஏப்.27-

ரயில் பாதை மேம்பாட்டு பணிகள் காரணமாக, காவேரி விரைவு ரயில் உட்பட 23 ரயில்களின் சேவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. கர்நாடக மாநிலம் பெங்களூரு கன்டோண்மென்ட்டில் ரயில் பாதை மேம்பாட்டு பணிகள் நடைபெறுகின்றன. இதனால், இத்தடத்தில் 23 ரயில்களின் சேவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. இதன்படி, சென்னை சென்ட்ரல் அசோகாபுரம் காவேரி விரைவு ரயில் (16021), வரும் ஜூன் 3, 4, 5, 6, 9, 10, 11, 21, 26 ஜூலை 2, 5, 6ம் தேதிகளில் ரத்து செய்யப்படும்.



அசோகாபுரம் சென்னை சென்ட்ரல் விரைவு ரயில் (16022) வரும் ஜூன் 4, 5, 6, 7, 10, 11, 12, 22, 27 ஜூலை 3, 6, 7ம் தேதிகளிலும் ரத்து செய்யப்படும் கே.எஸ்.ஆர். பெங்களூரு சென்னை சென்ட்ரல் அதிவிரைவு ரயில் (12658), வரும் ஜூன் 4, 5, 6, 7, 10, 11,12, 22, 27 ஜூலை 3, 6, 7 ஆகிய தேதிகளி லும், சென்னை சென்ட்ரல் பெங்களூரு அதி விரைவு ரயில் (12657) வரும் ஜூன் 5, 6, 7, 8, 11, 12, 13, 23, 28 ஜூலை 4, 7, 8ம் தேதிகளிலும் ரத்து செய்யப்படும்.

கர்நாடக மாநிலம் யஷ்வந்த் பூர் சென்னை சென்ட்ரல் ரயில் (12291), வரும் ஜூன் 5, 12, ஜூலை 3ம் தேதிகளிலும், சென்னை சென்ட்ரல் யஸ் வந்த்பூர் அதி விரைவு ரயில் (12292) வரும் ஜுன் 6, 13, ஜூலை 4 தேதிகளிலும் ரத்து செய்யப்படும்.

மைசூர் சென்னை சென்ட் ரல் அதி விரைவு ரயில் (22681) வரும் ஜூன் 10ம் தேதியும். சென்னை சென்ட்ரல் மைசூர் அதி விரைவு ரயில் (22682) வரும் ஜூன் 11ம் தேதியும் ரத்து செய்யப்படும்.கே. எஸ்.ஆர். பெங்களூரு ஜோலார்பேட்டை, ஜோலார்பேட்டை கே.எஸ். ஆர்.பெங்களூரு பயணிகள் ரயில்கள் (6655066549) வரும் ஜூலை 7ம் தேதியன்று ரத்து செய்யப்படுகிறது.

ஜோலார்பேட்டை கேஎஸ்ஆர் பெங்களூரு நகர் மெமு ரயில் (16519) பகுதி ரத்து செய்யப்படும். இதுதவிர, 12 ரயில்களின் நேரம் மாற்றி அமைக்கப்பட உள்ளன. இத்தகவல் தெற்கு ரயில்வே வெளி யிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழகத்தின் சில மாவட்டங்களில் ஏப்.30 முதல் 3 நாட்களுக்கு கனமழை!

சென்னை, ஏப்.27-

தமிழகத்தில் ஏப்.30 முதல் 3 நாட்களுக்கு நீலகிரி, சேலம் உள்ளிட்ட சில மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.இது தொடர்பாக வானிலை ஆய்வு மையம் வெளி யிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: வட கர்நாடகத்தின் உள்பகுதி முதல் குமரிக்கடல் வரை, தெற்கு கர்நாடகத்தின் உள்பகுதி மற்றும் தமிழகம் வழியாக ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை சுமார் 900 மீட்டர் உயரத்தில் நிலவுகிறது. இதன் காரணமாக நாளை (ஏப்.27) முதல் 29ம் தேதி வரை மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், தென் தமிழக கடலோர மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களின் கடலோர பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.



ஏப்ரல் 30, மே 1, 2 தேதிகளில் தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஏப்.30ம் தேதி நீலகிரி, கோவை, ஈரோடு, சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களிலும், மே 1ம் தேதி மேற்கூறிய மாவட்டங்கள் மற்றும் திருப்பத்தூர் மற்றும் வேலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய (மணிக்கு 30 முதல் 40 கிமீ வேகத்தில்) மிதமானது முதல் கன மழை பெய்யக்கூடும். தமிழகத்தின் உள் மாவட்டங்களில் நாளை முதல் ஏப்.30ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கக்கூடும். கடலோர தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை வழக்கமான அளவில் இருக்கக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 100 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 82 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# ரூ.20 குடிநீர் பாட்டில் ரூ.100க்கு விற்பது ஏன்? கேதார்நாத் கோயில் வளாகத்தில் உள்ள வியாபாரி விளக்கம்

டேராடுன், ஏப்.27-

உத்தராகண்ட் மாநிலம், ருத்ரபிரயாக் மாவட்டத்தில் கேதார் நாத் கோயில் அமைந் துள்ளது. சுமார் 11,755 அடி உயரத்தில் உள்ள இந்த கோயில் கோடை காலத்தில் மட்டுமே திறந்திருக்கும்.

கடந்த 22ம் தேதி கேதார்நாத் கோயில் நடை திறக்கப்பட்டது. பல்வேறு மாநிலங்களை சேர்ந்த மக்கள் உத்தராகண்டின் கவுரிகுண்ட் பகுதியை சாலை வழியாக சென் றடைந்து, அங்கிருந்து 16 கி.மீ. தொலைவு பாத சாரியாக மலையேறி கேதார்நாத் கோயிலுக்கு செல்ல வேண்டும்.

சில நாட்களுக்கு முன்பு கோயில் வளாகத்தில் உள்ள கடையில் பெண் பக்தர் ஒருவர் குடிநீர் பாட் டில் வாங்கினார். ரூ.20 விலை குறிப்பிடப்பட்ட ஒரு லிட்டர் பாட்டிலுக்கு கடைக் காரர் ரூ.100 வசூலித்தார். எதற்காக அதிக தொகை வாங்குகிறீர்கள் என்று பெண் பக்தர் கேட்டபோது





கடைக்காரர் கூறியதாவது:

கேதார்நாத் கோயில் 5 மாதங்கள் வரை மட்டுமே திறந்திருக்கும். கோயில் வளாகத்துக்கு வருவதற்கு சாலை வசதி கிடையாது. இதனால் வாகனங்களில் பொருட்களை கொண்டு வர முடியாது. கோவேறு கழுதைகள் அல்லது தொழிலாளர்கள் மூலம் மட்டுமே பொருட்களை கோயில் வளாகத்துக்கு கொண்டு வர முடியும்.

ஒரு கோவேறு கழுதை யில் 48 குடிநீர் பாட்டில் களை மட்டுமே எடுத்து வர முடியும். அதற்கு ரூ.3,500 கட்டணம் வசூலிக்கப்படு கிறது. ஒரு தொழிலாளி தனது முதுகில் 40 கிலோ எடையை மட்டுமே சுமந்து வர முடியும். அவருக்கு ரூ.2,500 கூலி கொடுக்க வேண்டும்.

இந்த செலவைக் கணக்கிட்டே ரூ.20 மதிப் புள்ள ஒரு லிட்டர் குடிநீர் பாட்டிலுக்கு ரூ.80 முதல் ரூ.100 வரை வசூலிக் கிறோம். எங்களுக்கு குறைவான லாபம் மட் டுமே கிடைக்கிறது. இவ் வாறு கடைக்காரர் தெரி வித்துள்ளார். பெண் பக் தர், கடைக்காரர் இடையி லான இந்த உரையாடல் வீடியோ சமூக வலைதளங் களில் வைரலாக பரவி வருகிறது.

# தேன்கனிக்கோட்டை அருகில் 3000 ஆண்டுகள் பழமையான விசித்திரமான ஓவியங்கள் கண்டுபிடிப்பு

கிருஷ்ணகிரி, ஏப்.27-

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை அருகில் 3000 ஆண்டுகள் பழமையான விசித்திரமான ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பெரியார் பல்கலைக்கழகம் தொழில்முறை பயிற்சி மற்றும் முதுகலை ஆய்விற்காக, கிருஷ்ணகிரி அரசு ஆடவர் கலைக்கல்லூரி வரலாற்றுத்துறை முதுகலை மாணவி சத்யா மற்றும் இளங்கலை மாணவர்களான ஜாகீர்ஷன், சிவசங்கர், நேதாஜி, ரிஸ்வான், ராமன் ஆகியோர், பேராசிரியர் வெங்கடேஸ்வரன் தலைமையில் கள ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். அதன்படி, கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை தாலுகா கொப்பக்கரை பஞ்சாயத்து சூலகுண்டா பகுதியில் மேற்கொண்ட கள ஆய்வின்போது, ஊருக்கு கிழக்கே உள்ள முனியப்பசாமி கோ யிலையொட்டி உள்ள கெவிகுண்டு என்ற பாறையில், நான்கு தொகுதிகளாக உள்ள, 3,000 ஆண்டுகள் பழமையான பெருங்கற்கால வியப்பூட்டும் விசித்திரமான ஓவியங்களை கண்டறிந்துள்ளனர். அத்துடன் இந்த பாறைக்கு வடக்கே உள்ள பாறையிலும் பெருங்கற்கால அரிய ஓவியங்களையும் கண்டறிந்தனர்.



இது குறித்து பேராசிரியர் வெங்கடேஸ்வரன் கூறியதாவது: தமிழ்நாட்டிலேயே அதிக அளவிலான தொல்லியல் எச்சங்களை கொண்டுள்ள மாவட்டம் கிருஷ்ணகிரி மாவட்டம். இங்கு கற்காலம் தொடங்கி இன்று வரை தனக்கென ஒரு தனித்துவமான வரலாற்றுத் தொடர்ச்சியை கொண்டுள்ளது. இங்கு ஏராளமான நுண்கற்காலக் கருவிகள், புதிய கற்காலக் கருவிகள், பெருங்கற்கால நினைவு சின்னங்கள், புதிய கற்கால மற்றும் பெருங்கற்கால வெள்ளை மற்றும் சிவப்பு நிற பாறை ஓவியங்கள் அதிகமாக காணப்படுகிறது. அத்துடன், இங்கு கண்டறியப்பட்டுள்ள பெரும்பான்மையான ஓவியங்களில் வேட்டை காட்சிகள், போர்க்காட்சிகள், சடங்கு காட்சிகள், குழு நடன காட்சிகள் மற்றும் விலங்குகளின் உருவ ஓவியங்களும் அதிகமாக காணப்படுகின்றன.

தற்போது இங்கு கண்டறியப்பட்டுள்ள ஓவியங்கள் இயற்கையான பாளையின் தாழ்வாரத்தின் மேல் பகுதியில் வெள்ளை நிறத்தில் வரையப்பட்டுள்ளது. இவ்வோவியங்கள் மூன்று தொகுதிகளாக வரையப்பட்டுள்ளன. இதில், முதல் தொகுதி பாறையின் கிழக்கு பகுதியிலும், மற்ற இரண்டு தொகுதிகள் பாறையின் மேற்கு பகுதியிலும் உள்ள மேற்பரப்பில் காணப்படுகிறது. ஓவியத்தின் ஒருசில இடங்களில் காற்று, மழை மற்றும் தற்போதைய மனிதர்களின் அலங்கோல வரைவுகள் காரணமாக சற்று மங்கலாகவும், தெளிவற்றும் காணப்படுகிறது. இருப்பினும் ஓவியத்தின் முக்கியமான உருவங்களை தெளிவாக காணமுடிகிறது.தற்போது இங்கு கண்டறியப்பட்டுள்ள ஓவியங்கள் இயற்கையான பாளையின் தாழ்வாரத்தின் மேல் பகுதியில் வெள்ளை நிறத்தில் வரையப்பட்டுள்ளது. இவ்வோவியங்கள் மூன்று தொகுதிகளாக வரையப்பட்டுள்ளன. இதில், முதல் தொகுதி பாறையின் கிழக்கு பகுதியிலும், மற்ற இரண்டு தொகுதிகள் பாறையின் மேற்கு பகுதியிலும் உள்ள மேற்பரப்பில் காணப்படுகிறது. ஓவியத்தின் ஒருசில இடங்களில் காற்று, மழை மற்றும் தற்போதைய மனிதர்களின் அலங்கோல வரைவுகள் காரணமாக சற்று மங்கலாகவும், தெளிவற்றும் காணப்படுகிறது. இருப்பினும் ஓவியத்தின் முக்கியமான உருவங்களை தெளிவாக காணமுடிகிறது.

முதலாவது ஓவியத் தொகுப்பு மூத்தோர் வழிபாட்டினை குறிக்கும் ஓவியம் ஆகும். இங்கு புதிய கற்காலம் மற்றும் பெருங்கற்கால ஓவியமும் காணப்படுகிறது. இந்த ஓவியத்தில் மூன்று மனித உருவங்களுடன் வடிவியல் உருவமும் சூலம் போன்ற மற்றொரு குறியீடும் இடம் பெற்றுள்ளது. வடிவியல் குறியீட்டிற்கு கீழே உள்ள மனித உருவம் பெரிதாகவும், இடப்புறம் உள்ள உருவம் சிறிதாகவும் காட்டப்பட்டுள்ளது. பெரிய மனித உருவத்திற்கு வலது புறம் மற்றொரு கிடந்த நிலையிலான மனித உருவமும், வடிவியல் உருவமும், கிடந்த நிலையிலான பாண்டில் விளக்கு ஒன்றும் வரையப்பட்டுள்ளது.

இரண்டாவது ஓவியத் தொகுப்பில் மூன்று மனித உருவங்கள் காணப்படுகின்றன. அதில் இடது மற்றும் வலது புறத்தில் பெண் உருவங்களும், நடுவில் ஒரு ஆண் உருவம் மற்றும் ஒரு குழந்தையின் உருவரும் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. ஆண் உருவத்தின் இடதுபுறம் ஒரு சடங்கு பொருள் போன்ற அமைப்பையும் காணலாம். அத்துடன் இந்த ஓவியத்தில் உள்ள ஆண் உருவத்தின் இரு கைகளிலும், இரு கால்களிலும் ஆறு விரல்கள் விரித்த நிலையில் காட்டப்பட்டுள்ளது. மேலும் ஆண் மற்றும் பெண்களின் கால்களும் விரித்த நிலையில் காட்டப்பட்டுள்ளது. இவ்வாறு விரித்த நிலையில் இருக்கும் மனித உருவங்கள் ஒரு சடங்கு நிகழ்வை குறிக்கலாம். அத்துடன் ஆணின் கால்களுக்கு இடையே ஆண் உறுப்பு தெளிவாக காட்டப்பட்டுள்ளது. மேலும் வலதுபுறம் காட்டப்பட்டுள்ள பெண் உருவத்திற்கு பெரிய மார்பகங்கள் உள்ளன. ஆண் உருவத்திற்கு இடதுபுறம் உள்ள பெண் உருவம் மல்லாந்து படுத்த நிலையில் காட்டப்பட்டுள்ளது. இவ்வோவியத்தில் உள்ள ஆண் மற்றும் பெண் உருவங்களில் கழுத்துப் பகுதியில் காணப்படும் அலங்காரம் கொண்ட அமைப்பு சடங்குகளின்போது அணியும் சிறப்பான அணிகலன்களின் ஒரு பகுதியாகும்.

மூன்றாவது ஓவியத் தொகுப்பில் ஒரு மனித உருவமும், வடிவியல் குறியீடுகளும், சிந்துவெளி கீறல் குறியீடுகள் என மொத்தம் ஏழு உருவங்கள் ஒரே நேர்க்கோட்டில் இடம் பெற்றுள்ளன. வெள்ளை நிறத்திலான ஓவியங்களில், ஒரு மனித உருவம் உடல் அசைவுகளுடன் வேகமாக நடப்பது போன்று காட்டப்பட்டுள்ளது. மேலும் அந்த உருவங்களுக்கு முன்புறம் இரு வடிவியல் உருவங்களும் காட்டப்பட்டுள்ளது. அத்துடன் அந்த வடிவியல் உருவங்களுக்கு அடுத்ததாக நின்ற நிலையிலான ஒரு மனித உருவம் கட்டத்திற்குள் இருப்பது போன்றும், அதன் அருகில் சிந்துவெளி கீறல் குறியீட்டை போல ஒரு குறியீடும் இடம் பெற்றுள்ளது. அக்குறி யீட்டிற்கு கீழ் சூல குறியிடும் இடம் பெற்றுள்ளது. ஆகவே, ஒட்டுமொத்தமாக இந்த மூன்றாவது ஓவியத் தொகுப்பானது தாந்திரீகம் மற்றும் சடங்கு நிகழ்ச்சியை பிரதிபலிப்பதாகவே உள்ளது.4வது தொகுப்பில், கெவிக்கொல்லை பாறைக்கு 200 அடி தூரத்தில் வடக்கே உள்ள ஒரு பாறையிலும் இரும்புக்கால ஓவியமும் கண்டறியப்பட்டுள்ளது. அதனை சுற்றியுள்ள நிலத்தில் கருப்பு சிவப்பு பானை ஓடுகள் மற்றும் இரும்பு கழிவுகளும் கிடைத்தது. இதன்மூலம் இப்பகுதியானது 3,000 ஆண்டுகளுக்கு முன்னர் மக்களின் வாழ்விடப் பகுதியாக இருந்திருக்கிறது என்பதை அறிய முடிகிறது. அதேபோல், அங்கு கண்டறிந்த ஓவியமானது தெளிவான ஐந்து மனித உருவங்களை கொண்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

# அமெரிக்க அதிபர் பங்கேற்ற விருந்தில் துப்பாக்கிச்சூடு: பத்திரமாக வெளியேறிய ட்ரம்ப்

வாஷிங்டன், ஏப்.27-

வெள்ளை மாளிகை பத்திரிகையாளர்களின் விருந்து விழாவில் துப்பாக்கிச்சூடு நடைபெற்றது. இந்நிலையில், இதில் பங்கேற்ற அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப், பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக அதிகாரிகள் புடைசூழ பத்திரமாக வெளியேற்றப்பட்டார்.இந்த விருந்து விழா வாஷிங்டனில் உள்ள ஹில்டன் நட்சத்திர ஹோட்டலில் நடைபெற்றது. இதில் அதிபர் ட்ரம்ப், அவரது மனைவி மெலினா ட்ரம்ப், துணை அதிபர் ஜே.டி.வான்ஸ் உள்ளிட்ட முக்கிய அமெரிக்க தலைவர்கள் பலர் பங்கேற்றனர். இதில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு இருந்த பாதுகாப்பு அதிகாரியை நோக்கி தனியொரு நபர் துப்பாக்கிச்சூடு நடத்தி உள்ளார். இதையடுத்து பாதுகாப்பு கருதி அதிபர் ட்ரம்ப் மற்றும் முக்கிய தலைவர்களை பாதுகாப்பு படையினர் பத்திரமாக அந்த விருந்து விழாவில் இருந்து வெளியேற செய்து, அழைத்து சென்றனர்.என்ன நடந்தது?



வாஷிங்டனில் உள்ள ஹில்டன் நட்சத்திர ஹோட்டலில் வெள்ளை மாளிகை பத்திரிகை யாளர்களுக்கான ஆண்டு விருந்து நடைபெற்றது. இதில் ட்ரம்ப் பங்கேற்றார். அப்போது ஆயுதங்களுடன் வந்த நபர் ஒருவர் பாதுகாப்பு கட்டமைப்பை கடந்து செல்ல முயன்றுள்ளார். அப்போதுதான் தன் வசம் இருந்த ஷாட்கன் துப்பாக்கியால் பாதுகாப்பு பணியில் இருந்து அதிகாரி மீது சுட்டுள்ளார். அந்த சப்தம் கேட்டு விருந்து கூடத்தில் இருந்தவர்கள் மேசைக்கு கீழே தஞ்சம் அடைந்தனர். தொடர்ந்து பாதுகாப்பு அதிகாரிகள் புடைசூழ அந்த விருந்தில் பங்கேற்ற ட்ரம்ப் வெளியேறினார்.தாக்குதல் நடத்திய நபர் யார்? இந்த துப்பாக்கிச்சூடு சம்பவம் உலக அளவில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இந்நிலையில், இந்த தாக்குதலை நடத்தியது யார் என்ற விவரம் தெரியவந்துள்ளது. இது தொடர்பாக ட்ரம்ப் தனது சமூக வலைதள பதிவில் கூறியுள்ளதாவது:


துப்பாக்கிச்சூடு நடத்திய நபர் கைது செய்யப்பட்டுள்ளார். நிலைமையை சீராக்கும் வகையில் களத்தில் துறை சார்ந்த அதிகாரிகள் பணியாற்றி வருகின்றனர். பாதுகாப்பு அதிகாரிகளின் பணி அற்புதமானது. துணை அதிபர் உள்ளிட்ட அனைவரும் பாதுகாப்பாக உள்ளனர்.ஆயுதங்களுடன் ஒரு நபர் பாதுகாப்பு அதிகாரிகள் இருந்த பகுதிக்குள் நுழைய முயன்றுள்ளார். அப்போது அவரை அதிகாரிகள் தடுத்து நிறுத்தி உள்ளனர். இதில் ஒரு அதிகாரி மீது துப்பாக்கி குண்டு பாய்ந்தது. இருப்பினும் அவரது கவச உடை தாக்குதலில் இருந்து அவரை காத்துள்ளது. இந்த தாக்குதலுக்கான காரணம் என்ன என்பது விசாரணையில் தான் தெரியவரும் என தெரி வித்துள்ளார்.

இந்த தாக்குதலை நடத்தியது 31 வயதான கோல் தாமஸ் ஆலன் என தெரியவந்துள்ளது. அவர் கலிபோர்னியாவை சேர்ந்தவர் என்பது உறுதியாகி உள்ளது. அவரது புகைப்படமும் இப்போது வெளியாகி உள்ளது. தாக்குதல் சம்பவத்தின் வீடியோ காட்சியை ட்ரம்ப் தனது ட்ரூத் சோஷியல் சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ளார்.கடந்த 2024ல் ட்ரம்ப்பை கொல்வதற்கான முயற்சி இரண்டு முறை நடைபெற்றது. இதில் பென்சில்வேனியாவில் நடைபெற்ற தாக்குதலில் அவர் காயமடைந்தார். தற்போது தாக்குதல் நடந்த ஹில்டன் ஹோட்டலுக்கு வெளியே கடந்த 1981ல் முன்னாள் அமெரிக்க அதிபர் ரொனால்ட் ரீகன் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. அதில் அவர் காயமடைந்தார்.

# சூளகிரி அருகே108 ஆம்புலன்சில் சுகபிரசவமாகஆண் குழந்தை பிறந்தது

கிருஷ்ணகிரி, ஏப்.27-
கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி அருகே 108 ஆம்புலன்சில் சுகபிரசவமாக ஆண் குழந்தை பிறந்தது. கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி தாலுகா சாமல்பள்ளம் அடுத்த பெரியகுதிபாலா கிராமத்தை சேர்ந்தவர் திம்மராயன். கூலி தொழிலாளி. இவரது மனைவி தேன்மொழி(20). இவருக்கு நேற்று காலை சுமார் 6 மணியளவில் பிரவச வலி ஏற்படுள்ளது. இதையடுத்து மருத்துவமனைக்கு செல்ல 108 ஆம்புலன்சுக்கு தகவல் தெரிவித்துள்ளனர். தகவலறிந்த சூளகிரி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள 108 ஆம்புலன்ஸ் ஊழியர்கள் உடனடியாக விரைந்து சென்று, பிரசவ வலியால் துடித்து கொண்டிருந்த தேன்மொழியை மீட்டு, முதலுதவி செய்து, ஆம்புலன்சில் கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையின் தாய்சேய் கிருஷ்ணகிரி நகரில் உள்ள மருத்துவமனைக்கு விரைந்தனர். அப்போது காலை 6.30 மணிக்கு ஆம்புலன்ஸ் கிருஷ்ணகிரி - ஓசூர் தேசிய நெடுஞ் சாலையில் சாம்பல்பள்ளம் என்ற பகுதியில் வந்து கொண்டிருந்த போது தேன்மொழிக்கு பிரசவ வலி அதிகமானதால் ஆம்புலன்ஸ் ஓட்டுநர் முகமது, ஆம்புலன்ஸை சாலை ஓரமாக பாதுகாப்பாக நிறுத்தியுள்ளார். பின்னர் மருத்துவ உதவியாளர் விக்னேஷ் பிரசவம் பார்த்துள்ளார். அதில் தேன்மொழிக்கு அழகான ஆண் குழந்தை சுகபிரசவமாக பிறந்தது. பின்னர் தாயும் சேயும் தொடர் சிகிச்சைக்காக கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று, அனுமதிக்கப்பட்டனர். தேன்மொழிக்கு இது முதல் பிரசவம் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது தாயும் சேயும் நலமாக உள்ளதாக டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

# தேர்வு செலவின நிதி ரூ.50 லட்சம் நிலுவை சென்னை பல்கலை. மீது ஆசிரியர் சங்கம் புகார்




சென்னை, ஏப்.27-
சென்னை பல்கலைக்கழகம் 8 அரசு கலை அறிவியல் கல்லூரிகளுக்கு ரூ.50 லட்சம் தேர்வு செலவின நிதியை நிலுவையில் வைத்திருப்பதாக உயர்கல்வித்துறை செயலரிடம் அரசு கல்லூரி ஆசிரியர் சங்கம் புகார் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகத்தின் பொதுச்செயலாளர் சே. சுரேஷ் உயர்கல்வித்துறையின் செயலருக்கு அனுப்பியுள்ள புகார் மனுவில் கூறியிருப்பதாவது: சென்னை பல்கலைக்கழகத்தின் கீழ் 121 இணைப்பு கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 100 கல்லூரிகள் தன்னாட்சி அந்தஸ்து பெறாத கல்லூரிகள்.இந்த கல்லூரிகளில், திருத்தணி, பெரும்பாக்கம், ஆர்.கே. நகர், திருவொற்றியூர், குன்றத்தூர், நெமிலி, உத்திரமேரூர் ஆகிய 8 அரசு கலை அறிவியல் கல்லூரிகளும் அடங்கும்.
மேற்குறிப்பிட்ட 8 அரசு கல்லூரிகளில் மாணவர்களிடமிருந்து ஒரு பருவத்துக்கு சுமார் ரூ.2 கோடி தேர்வு கட்டணமாக பெறப்பட்டு பல்கலைக்கழகத்துக்கு செலுத்தப்படுகிறது. ஆனால், இக்கல்லூரிகளில் தேர்வு நடத்துவதற்கு உரிய நிதியை சென்னை பல்கலைக்கழகம் வழங்குவதில்லை.கடந்த 2024ம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடத்தப்பட்ட பருவ தேர்வுகளுக்கு இதுவரை எந்த தொகையும் வழங்கப்படவில்லை. அந்த ஒரு பருவ தேர்வுக்கு மட்டும் 8 அரசு கல்லூரிகளுக்கு வழங்கப்படாத தொகை மட்டும் ரூ.25 லட்சம். கடந்த 2024 நவம்பர், 2025 ஏப்ரல் மற்றும் நவம்பர் ஆகிய 3 பருவ தேர்வுகளுக்கு முன்பணம் மட்டும் வழங்கப்பட்டு இருக்கிறது. அம்மூன்று பருவ தேர்வுகளுக்கான எஞ்சியுள்ள ரூ.25 லட்சம் இன்னும் வழங்கப்படவில்லை.
மாணவர்களின் நலனை கருத்தில்கொண்டு மேற்குறிப்பிட்ட ரூ.50 லட்சத்தையும் தேர்வு நடத்திய ஆசிரியர்கள் தங்கள் சொந்த நிதியில் இருந்து செலவு செய்துள்ளனர். எனவே, அரசு கல்லூரி ஆசிரியர்கள் தங்கள் சொந்த நிதியிலிருந்து தேர்வுகள் நடத்துவதற்கு செய்துள்ள செலவினத்தொகை ரூ.50 லட்சத்தை சென்னை பல்கலைக்கழகம் உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறோம். இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

# தெலங்கானா ராஷ்டிர சேனா: கவிதா புதிய கட்சி தொடக்கம்




ஹைதராபாத், ஏப்.27-
தெலங்கானா முன்னாள் முதல்வரும், பாரத் ராஷ்ட்ரிய சமிதி (பிஆர்எஸ்) கட்சியின் தலைவருமான கே.சந்திரசேகர ராவின் மகளான கவிதா, நிஜாமாபாத் மேலவை உறுப்பினராக உள்ளார். இவர் ஒழுங்கு நடவடிக்கை காரணமாக பிஆர்எஸ் கட்சியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டிருந்தார்.
இந்நிலையில் மெட்சல் மாவட்டம், முசீராபாத்தில் நேற்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தெலங்கானா ராஷ்டிர சேனா எனும் புதிய கட்சியை தொடங்கி இருப்பதாக கவிதா அறிவித்தார். அப்போது அவர் பேசியதாவது:
தெலங்கானா மாநிலம் உருவாக பல கஷ்டங்களை சந்தித்தோம். தற்போது மாநிலத்தை காப்பாற்றிக் கொள்ள ஒற்றுமையுடன் நாம் போராடும் நேரம் வந்துள்ளது. சந்திரசேகர ராவ் தலைமையிலான தெலங்கானா போராட்ட ரதம் திசை மாறி பயணிக்கிறது. பிஆர்எஸ் கட்சி மக்களின் தேவைகளை அறியவில்லை. புதிய மாநிலத்தில் நடக்க வேண்டிய பணிகள் இன்னமும் சரிவர நடைபெறவில்லை. விவசாயிகள் பிரச்சினை தீரவில்லை. நாம் நினைத்த தெலங்கானா இன்னமும் வரவில்லை. அன்று ஆட்சி செய்த குடும்பத்தில் நானும் ஒரு உறுப்பினர்தான். இதற்காக தெலங்கானா மக்களிடம் மன்னிப்பு கேட்கிறேன்.
அந்த தவறை சீர் செய்யத்தான் தற்போது அங்கிருந்து வெளியேறி புதிய கட்சி தொடங்கி உள்ளேன். அப்போதைய சந்திரசேகர ராவ் வேறு. இப்போதுள்ள சந்திரசேகர ராவ் வேறு. நரிகள், ஓநாய்களின் பிடியில் அவர் சிக்கி உள்ளார். மக்கள் தெலங்கானா ராஷ்டிர சேனா கட்சியுடன் இணைந்து தெலங்கானா வளர்ச்சிக்கு பாடுபட வேண்டும்.இவ்வாறு கவிதா பேசினார்.

### அனைவரையும் சமமாக மதிக்க வேண்டும்

# மாணவர்களுக்கு நீதிபதி ஜெகதீஷ் சந்திரா அறிவுரை




கேளம்பாக்கம். ஏப்.27-
புதுப்பாக்கம் டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியின் இரண்டாவது பட்டமளிப்பு விழாவில் பங்கேற்ற சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி ஜெகதீஷ் சந்திரா, அனைவரையும் சமமாக மதிக்க வேண்டும் என்று மாணவர்களுக்கு அறிவுறுத்தினார்.
கேளம்பாக்கத்தை அடுத்த புதுப்பாக்கத்தில் உள்ள சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் இரண்டாவது பட்டமளிப்பு விழா நேற்று நடந்தது. இதில், தமிழ்நாடு அரசு சட்டக்கல்வி இயக்குநர் கவுரி ரமேஷ் தலைமை வகித்தார். புதுப்பாக்கம் சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி முதல்வர் ஜெயகவுரி வரவேற்றார். சிறப்பு விருந்தினர்களாக, சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஜெகதீஷ் சந்திரா, சரவணன் ஆகியோர் பங்கேற்று 600 இளங்கலை மாணவ, மாணவிகளுக்கும், 30 முதுகலை மாணவ, மாணவிகளுக்கும் பட்டங்களை வழங்கினர்.
அப்போது நீதிபதி ஜெகதீஷ் சந்திரா பேசியதாவது, வழக்கறிஞர் தொழில் உன்னதமானது. இத்தொழிலில் வழக்கறிஞர் பேசுவதற்கு முன்பாகவே அவர் எப்படி என்று மதிப்பீடு செய்து விடுவார்கள். எனவே தோற்றம், கம்பீரம் இவை அனைத்தும் முக்கியம். நீதிமன்ற வழக்கறிஞர் உடைக்கு மதிப்பு உண்டு. அதை எப்போதும் நாம் மரியாதையுடன் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். மரியாதை என்பது பலவீனம் அல்ல. அது ஒரு கட்டுப்பாட்டுடன் கூடிய பலம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். பேசும் விதம், அமைதி, குரல் இவை உங்களின் திறமையை வெளிப்படுத்துகிறது. நீதிமன்றத்தில் நாம் குரலை உயர்த்தி பேசி விடுவோம் என்று எண்ணி விடாதீர்கள். அமைதியாக பேசி வாதாடி வெற்றி பெற்ற விஷயங்கள் அதிகம் உண்டு. சத்தமாக வாதாடினால் வெற்றி பெற முடியாது, சரியான முறையில் வாதாடினால் தான் வெற்றி பெற முடியும். கடந்த காலங்களை விட தற்போது உள்ள கால கட்டத்தில் சட்டக் கல்வி வேகமாக வளர்ந்து வருகிறது. சட்டத்தை ஆழமாக படிக்க வேண்டும். தீர்ப்புகளை முழுமையாக வாசித்து தெரிந்து கொள்ள வேண்டும். நீதிமன்றத்தில் அதிகமாக வாதாடுவது கூட சில நேரத்தில் பலவீனத்தை ஏற்படுத்தும். எனவே துல்லியமாக, முக்கியமானதை சுருக்கமாக வாதாடினாலே வெற்றி தரும். நேர்மையாக, உண்மையாக இருக்க வேண்டும். ஏனென்றால் அப்போது தான் நீதிமன்றமும் நீதிபதிகளும் உங்களை நம்புவார்கள். பணம் படைத்தவர்களாக இருந்தாலும், எளியவர்களாக இருந்தாலும் மனிதர்களை மனிதர்களாக மதிக்க வேண்டும். அனைவரையும் சமமாக மதிப்பது நற்பண்பு. இவ்வாறு அவர் கூறினார்.பட்டறைப் பெரும்புதூர் சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி முதல்வர் கயல்விழி, பேராசிரியர்கள். அலுவலக பணியாளர்கள், பெற்றோர், மாணவர்கள் கலந்து கொண்டனர். நிறைவில், சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி இணைப் பேராசிரியர் சாந்தி நன்றி கூறினார்.



# 16 ஆண்டில் இல்லாத அளவு வெளிநாட்டு முதலீடு சரிவு

### மார்கன் ஸ்டான்லி தகவல்

மும்பை, ஏப்.27-
இந்திய பங்குச் சந்தை முதலீடு குறித்து மார்கன் ஸ்டான்லி வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில் கூறியிருப்பதாவது:
கடந்த மார்ச் மாதத்துடன் முடிவடைந்த காலாண்டில், இந்தியப் பங்குச் சந்தைகளில் வெளிநாட்டுப் போர்ட்ஃபோலியோ முதலீட்டாளர்களின் (எப்பிஐ) பங்களிப்பு 16 ஆண்டுகளில் இல்லாத அளவுக்குக் குறைந்துள்ளது. அதேநேரம், உள்நாட்டு நிறுவன முதலீட்டாளர்கள் மற்றும் தனிநபர்களின் பங்களிப்பு 29% என்ற சாதனை அளவை எட்டியுள்ளது.
கடந்த மார்ச் மாதத்துடன் முடிந்த காலாண்டில், இந்திய பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களில் ஒட்டுமொத்த உள்நாட்டு முதலீட்டாளர்களின் முதலீடு முந்தைய காலாண்டை விட 0.4% அதிகரித்துள்ளது. இதில் உள்நாட்டு நிறுவனங்களின் பங்கு 0.58% உயர்ந்து 19.3% ஆக உள்ளது. தனிநபர் முதலீட்டாளர்களின் நேரடிப் பங்களிப்பும் 0.20% அதிகரித்துள்ளது.
இதற்கு நேர்மாறாக, எப்பிஐகளின் பங்களிப்பு இந்த காலாண்டில் 0.90% குறைந்து, கடந்த 16 ஆண்டுகளில் இல்லாத மிகக் குறைந்த நிலையை எட்டியுள்ளது.
வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நிதித்துறையில் அதிக முதலீடு செய்திருந்தாலும், இந்த காலாண்டில் அந்த அளவைச் சற்றே குறைத்துள்ளனர். தொழில் துறை அவர்களின் மிகக் குறைந்த முதலீட்டுத் துறையாக நீடிக்கிறது.
உள்நாட்டு நிறுவனங்களைப் பொறுத்தவரை, நிதித்துறையில் அவர்களின் முதலீடு குறைவாக இருந்தாலும், அந்த இடைவெளி தற்போது குறைந்து வருகிறது. நுகர்வோர் அத்தியாவசியப் பொருட்கள் துறையிலேயே அவர்கள் அதிக முதலீடு செய்துள்ளனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அனுமதியின்றி கனிமங்கள் எடுத்துச் சென்றால் குண்டர் சட்டம்: திருவள்ளூர் ஆட்சியர் எச்சரிக்கை




திருவள்ளூர், ஏப்.27-
ஆற்றுப்படுகைகள், அரசு புறம் போக்கு நிலங்களில் இருந்து உரிய அனுமதியின்றி கனிமங்கள் எடுத்துச் செல்வோர் மீது குண்டர் சட்டம் பாயும் என ஆட்சியர் பிரதாப் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: திருவள்ளூர் மாவட்டத்தில், ஆற்றுப் படுகைகள், அரசு புறம்போக்கு நிலங்கள், பட்டா நிலங்களில் இருந்து அரசின் உரிய அனுமதியின்றி கள்ளத்தனமாக கனிமங்களை வெட்டியெடுத்து, வாகனங்களில் கடத்திச் செல்வது தொடர்பாக கடந்த 16ம் தேதி திருவள்ளூர் மாவட்ட புவியியல் மற்றும் சுரங்கத் துறை அலுவலர்களால் ஊத்துக்கோட்டை வட்டத்தில் தீவிர ரோந்து பணிகள் மேற்கொண்டதில், உரிய அனுமதி நடைச்சீட்டு இல்லாமல் கள்ளத்தனமாக கனிமங்கள் (கிராவல் மற்றும் சாதாரண மண் ஏற்றிச் சென்ற 3 பாரஸ் வாகனங்கள் கைப்பற்றப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஊத்துக்கோட்டை காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. எனவே, இதுபோன்ற வாகனங்களை கண்காணிக்க தொடர் தீவிர ரோந்து பணிகள் மேற்கொள்ளமாறு வருவாய்த் துறை, கனிம வளத்துறை, காவல் துறையைச் சேர்ந்தவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான குற்றச்செயலில் ஈடுபடும் வாகன உரிமையாளர்கள் மற்றும் ஓட்டுநர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்வதுடன், இக்குற்றச் செயலில் தொடர்ந்து ஈடுபடும் வோரைக் கண்காணித்து அவர்கள் மீது குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இவ்வாறு ஆட்சியர் பிரதாப் கூறியுள்ளார்.

# பனையேறும் தொழிலாளி மீதான துப்பாக்கிச் சூடு: தென்காசி போலீஸ் விசாரிக்க தடை



மதுரை, ஏப்.27-
தென்காசி மாவட்டம் ஆலங்குளத்தைச் சேர்ந்த பனையேறும் தொழிலாளி மீது போலீஸார் நடத்திய துப்பாக்கிச் சூடு வழக்கை தென்காசி மாவட்ட போலீஸார் விசாரிக்க உயர் நீதிமன்ற மதுரை அமர்வு இடைக்காலத் தடை விதித்துள்ளது.தென்காசி மருதம் புத்தூரைச் சேர்ந்த பெருமாள் சேட் என்பவர் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு: எனது மகன் மணிகண்டன் பனை மரம் ஏறி பதநீர் இறக்கும் தொழில் செய்து வருகிறார்.கடந்த 7ம் தேதி கள் இருப்பதாக சாதனை நடத்தியபோது ஏற்பட்ட வாக்குவாதத்தில் எஸ்ஐ இசக்கிராஜா துப்பாக்கியால் சுட்டார். இதில் பலத்த காயமடைந்த அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இந்த வழக்கை சிபிஐ விசாரணைக்கு மாற்ற வேண்டும். இடைப்பீடு வழங்க உத்தரவிட வேண்டும். இவ்வாறு கூறியிருந்தார்.இந்த மனு, நீதிபதி புகழேந்தி முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கில் புதிய உத்தரவு பிறப்பிக்கும் வரை சம்பந்தப்பட்ட போலீஸார் இந்த வழக்கை விசாரணை செய்யக் கூடாது. சிபிஐ, எஸ்ஐ இசக்கிராஜா ஆகியோர் பதில் மனு தாக்கல் செய்ய உத்தரவிட்டார்.

# "ரயில்வேயில் ஆட்குறைப்பு நடவடிக்கை கூடாது" இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்



சென்னை, ஏப்.27-
இந்திய ரயில்வேயில் மொத்தப்பணியிடங்களில் இரண்டு விழுக்காடு பணியாளர்களை குறைக்க ரயில்வே நிர்வாகம் முடிவு செய்துள்ளதாக செய்திகள் வந்துள்ள நிலையில், இத்தகைய ஆட்குறைப்பு நடவடிக்கைகளை ரயில்வே மேற்கொள்ளக்கூடாது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.
இது குறித்து அக்கட்சியின் மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கையில், "இந்திய ரயில்வேயில் மொத்தமுள்ள பணியிடங்கள் 12 லட்சத்து 80 ஆயிரமாகும். இதில் இரண்டு விழுக்காடு பணியாளர்களை அதாவது 29 ஆயிரத்து 608 பணியாளர்களை குறைக்க ரயில்வே நிர்வாகம் முடிவு செய்துள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன. இது மக்கள் நலனுக்கு எதிரானது. இத் தொழிலாளர் விரோதப் போக்கு கடும் கண்டனத்திற்குரியது.
இந்த ஆட்குறைப்பு நடவடிக்கையால், தெற்கு ரயில்வேயில் மட்டும் ஏறத்தாழ 2,000 பணியாளர்கள் பணி நீக்கம் செய்யப்பட உள்ளனர். இது ரயில் பயணிகளின் பாதுகாப்பை கேள்விக்குறியாக்கும். விபத்துகளை தடுக்க உதவாது.இந்தியாவில் நாள் தோறும் 13 ஆயிரத்து 17 ரயில்கள் உட்பட தினசரி 22 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ரயில்கள் இயக்கப்படுகின்றன. அதற்கேற்ப புதிய பணியிடங்களை உருவாக்கி, நிரந்தர அடிப்படையில் பணியாளர்களை நியமிப்பதற்கு பதிலாக பணி குறைப்பு மேற்கொள்வது என்பது சரியல்ல.ஆண்டுக்கு இரண்டு கோடி வேலை வாய்ப்பு உருவாக்கப்படும் என வாக்குறுதி வழங்கிய ஒன்றிய பாஜக அரசு, தற்பொழுது ரயில்வே துறையில் ஆட்குறைப்பு நடவடிக்கை மேற்கொள்வதும், வேலை வாய்ப்புகளை ஒழித்துக் கட்டுவதும் அளித்த வாக்குறுதிக்கு நேர் எதிரானதாகும்.இன்று இந்தியா எதிர்கொள்ளும் முதன்மையான பிரச்சினை வேலையில்லா திண்டாட்டமாகும். இது இளைஞர்கள் மத்தியில் கடும் அதிருப்தியையும், விரக்தியையும், கோபத்தையும் உருவாக்கி உள்ளது .வேலையில்லா திண்டாட்டத்தால், மது, போதைப் பழக்கம், கொலை, கொள்ளை, தற்கொலைகள், வன்முறைகள் உள்ளிட்ட சமூகச் சீர்கேடுகள் அதிகரித்துள்ளன.
வேலையில்லா திண்டாட்டத்தை போக்குவதில் கவனம் செலுத்தாத ஒன்றிய பாஜக அரசு, ஆட்குறைப்பு நடவடிக்கையில் ஈடுபடுவது நாட்டின் இளைய தலைமுறையினரின் நலன்களுக்கும், அனைவருக்குமான பொருளாதார வளர்ச்சிக்கும் எதிரானதாகும்.இந்த ஆட்குறைப்பு நடவடிக்கையை உடனடியாக கைவிடுவது மட்டுமல்லாமல், தற்காலிக அடிப்படையில், ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் அனைத்து ரயில்வே பணியாளர்களுக்கும் பணி நிரந்தரம் வழங்கிட வேண்டும். புதிய பணியிடங்களை உருவாக்கி நிரந்தர அடிப்படையில் பணி நியமனம் செய்திட வேண்டும். ரயில்வேயை படிப்படியாக தனியார்மயமாக்கும் முயற்சிகளை கைவிட வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஒன்றிய பாஜக அரசை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161